உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரை 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள். பத்மநாபபுரம் மற்றும் தக்கலையில் புதிய துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் குடும்ப நல நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து எந்த செயற்குறிப்பும் இதுவரை பெறப்படவில்லை. புதிய கூடுதல் அமர்வு நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம், துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

கால்நடைக் கிளை நிலையம்

***51654 திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே செயல்பட்டு வந்த ஊரகக் கால்நடை மருந்தகம், 1–4–2013 முதல் கால்நடை மருந்தகமாகத் தரம்

உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த மருந்தகத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ரூபாய் 21 இலட்சம் செலவிலே கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவட்லா மலை மீது 4 கிராமங்கள் உள்ளன. அந்த 4 கிராமங்களில் சுமார் 2 ஆயிரம் மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். விவசாயமும், கால்நடை வளர்ப்பும்தான் இவர்களுடைய பிரதானத் தொழில். இது ஆந்திராவும், தமிழகமும் இணையும் பகுதி; பரந்து விரிந்த காடுகள் நிறைந்த பகுதி. எனவே, இங்கு வாழ்கின்ற மக்களுக்குக் கால்நடை வளர்ப்புதான் முக்கியத் தொழில். அந்தக் கால்நடைகளுக்கு நோய்த் தாக்குதல் ஏற்பட்டால், கீழே பேரணாம்பட்டுக்குக் கொண்டுவந்துதான் சிகிச்சை அளிக்கும் நிலை இருக்கின்றது. எனவே, அங்கிருக்கின்ற கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறையின் வாயிலாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*